RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R — MBBS MD — 87780 87742 — General Physician
Dr Praveena E — MBBS MS (ENT) — 9944 100443 — Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 13 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 124

# விவசாயிகளின் பாரம்பரிய அறிவை அறிவியல் ஆராய்ச்சி, சந்தை வாய்ப்புகளுடன் இணைக்க வேண்டும்- பிரதமரின் முதன்மை செயலாளர் வேண்டுகோள்

சென்னை – 13 நவம்பர், 2026 விவசாயிகளின் பாரம்பரிய அறிவை அறிவியல் ஆராய்ச்சி, சந்தை வாய்ப்புகளுடன் இணைக்க வேண்டும்- பிரதமரின் முதன்மை செயலாளர் வேண்டுகோள்.

இந்தியாவின் வேளாண் பல்லுயிர் பெருக்கத்தின் பாதுகாவலர்களாகவும், புதுமைக் கண்டுபிடிப்பாளர்களாகவும், விவசாயிகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்களின் பாரம்பரிய அறிவை அறிவியல் ஆராய்ச்சி, விதை அமைப்புகள், சந்தை வாய்ப்புகளுடன் இணைக்க வேண்டும் என்று பிரதமரின் முதன்மை செயலாளர் டாக்டர் பி கே மிஸ்ரா அழைப்பு விடுத்துள்ளார். தாவர ரகங்கள், விவசாயிகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் 22-வது நிறுவன நாள் மற்றும் தாவர மரபணு மீட்பவருக்கான விருது வழங்கும் விழாவில் உரையாற்றிய டாக்டர் மிஸ்ரா, இந்நிகழ்வு 2001-ம் ஆண்டின் தாவர ரகங்கள், விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் 25-ம் ஆண்டு நிறைவைக் குறிப்பதாக தெரிவித்தார்.

பாரம்பரிய அறிவு, உணவு பண்பாடுகள், சமூக வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கும் அதே சூழலில் பருவநிலை மாற்றம், நீர் பற்றாக்குறை, பூச்சிகள், நோய்களை எதிர்கொள்ளக்கூடிய பெயர்களை உருவாக்குவதற்கு இந்தியாவின் வளமான வேளாண் பல்லுயிர் பெருக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் கூறினார். இந்தியாவின் 22 வேளாண் பல்லுயிர் பெருக்க மையங்களை அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் 2012-ம் ஆண்டின் உணவு வேளாண் அமைப்பால் உலகளவில் முக்கிய வேளாண் பாரம்பரிய அமைப்பாக அங்கீகரிக்கப்பட்ட ஒடிசாவின் கோராபுட்டை சமூகம் சார்ந்த தலைமையிலான பாதுகாப்பிற்கு உதாரணமாக சுட்டிக்காட்டினார்.

# 45-வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் நாளை தொடங்கி வைக்கிறார்

சென்னை – 13 நவம்பர், 2026 45-வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் நாளை தொடங்கி வைக்கிறார்.

இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 45-வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி புதுதில்லியில் உள்ள பாரத மண்டபத்தில் நவம்பர் 14 முதல் 27 வரை நடைபெறவுள்ளது. மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நாளை ( 2026 நவம்பர் 13) இக்கண்காட்சியைத் தொடங்கி வைக்கிறார்.

‘ வளர்ச்சியும் பாரம்பரியமும்’ என்ற கருப்பொருளில் நடைபெறும் இக்கண்காட்சியில் 17 அரங்குகளில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 3,500- க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்கின்றனர். 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், 51 மத்திய அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன. பீகார், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகியவை கூட்டாளி மாநிலங்களாகவும், அசாம், தில்லி, ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் ஆகியவை சிறப்பு கவனம் செலுத்தும் மாநிலங்களாகவும் இடம்பெற்றுள்ளன. தாய்லாந்து, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இலங்கை உள்ளிட்ட 11 நாடுகளும் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றன. இதில் சுமார் நிறுவனங்களுக்கான 600 சிறப்பு அரங்கங்கள், 21 மாநிலங்கள் சார்பில் ‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு’ அரங்கங்கள், 90- க்கும் மேற்பட்ட உணவகங்கள், 87 கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. நவம்பர் 14 முதல் 18 வரை வணிகர்களுக்கான நாட்களாகவும், நவம்பர் 19 முதல் 27 வரை பொதுமக்களுக்கான நாட்களாகவும் இக்கண்காட்சி நடைபெறும். முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்குப் பொது நாட்களில் இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# வீரதீர விருதுகளுக்கான மேம்படுத்தப்பட்ட இணையதளத்தைப் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் தொடங்கி வைத்தார்

சென்னை – 13 நவம்பர், 2026 வகையிலான நவீன வடிவமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் இந்த இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்பு நிகழ்ச்சிகள், நினைவிடங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள், வார்பீடியா, விருது பெற்றவர்களின் முழு விவரங்கள், கேலன்ட்ரிபீடியா (கட்டுரைகள்), ஊடகப் பிரிவு மற்றும் மக்கள் அஞ்சலி செலுத்தும் பிரத்யேகப் பிரிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த இணையதளத்தில் இடம்பெற்றுள்ள ' இந்த டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் எளிதில் அணுகும் வீரக் கதை ' என்ற பிரத்யேகப் பகுதி, மாணவர்களை வீரதீர விருது பெற்றவர்களின் வரலாற்றுடன் நேரடியாக இணைக்கிறது. இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, முதல் பதிப்பில் 8 லட்சத்திலிருந்து 5-வது பதிப்பில் 1.92 கோடியாக உயர்ந்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய போர்கள், ராணுவ நடவடிக்கைகள் மற்றும் விருது பெற்றவர்கள் குறித்த டிஜிட்டல் களஞ்சியத்தை உருவாக்குவதுடன், இளைஞர்களிடையே தேசபக்தியை வளர்ப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறைச் செயலாளர் ராஜேஷ் குமார் சிங் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பலதரப்பு ஒத்துழைப்பு மூலம் பருவநிலை நடவடிக்கைகளை இந்தியா உறுதியுடன் மேற்கொண்டு வருகிறது: மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ்

சென்னை – 13 நவம்பர், 2026 பலதரப்பு ஒத்துழைப்பு மூலம் பருவநிலை நடவடிக்கைகளை இந்தியா உறுதியுடன் மேற்கொண்டு வருகிறது: மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ்.

துருக்கியின் அன்டாலியாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பருவநிலை மாநாட்டில் பங்கேற்பதற்கு முன்னதாக, மத்திய சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், எஃகு, சிமெண்ட், போக்குவரத்துத் துறைகளைச் சேர்ந்த தொழில்துறை பிரதிநிதிகள், கல்விசார் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புதுதில்லியில் இன்று ( 2026 நவம்பர் 12) கலந்துரையாடினார்.

இந்தக் கூட்டத்தில் தொழில்துறை மாற்றத்திற்கான தலைமைக் குழுவின் (லீட்ஐடி) இந்திய உறுப்பினர் நிறுவனங்களான டாடா ஸ்டீல், ஜேஎஸ்டபிள்யூ ஸ்டீல், செயில், அல்ட்ராடெக் சிமெண்ட், வால்வோ குழுமம், ஸ்பைஸ்ஜெட் உள்ளிட்ட நிறுவனங்களும், சென்னை, மும்பை, காரக்பூர், ஹைதராபாத், புவனேஸ்வர், தன்பாத் ஆகிய இடங்களில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகங்களும் (ஐஐடி) பங்கேற்றன.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பூபேந்தர் யாதவ், அரசு, தொழில்துறை, கல்வி நிறுவனங்களின் கூட்டு முயற்சியே இந்தியாவின் பருவநிலை நடவடிக்கைகளின் அடித்தளமாக உள்ளது என்று குறிப்பிட்டார். லீட்ஐடி 3.0 தளம் பருவநிலை இலக்குகளைச் செயல்வடிவத்திற்குக் கொண்டு வரும் என்றும் அவர் தெரிவித்தார். 2019- ம் ஆண்டில் இந்தியா, ஸ்வீடன் அரசுகளால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் தற்போது 19 நாடுகளும், 33 நிறுவனங்களும் உறுப்பினர்களாக உள்ளன. இதன் மூன்றாம் கட்டமான லீட்ஐடி 3.0 திட்டத்தை பூபேந்தர் யாதவ், ஸ்வீடன் பருவநிலை அமைச்சகத்துடன் இணைந்து 2026 நவம்பர் 17 அன்று அன்டாலியாவில் தொடங்கி வைக்கவுள்ளார்.

# 57-வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழா நவம்பர் 20 முதல் 28 வரை கோவாவில் நடைபெறுகிறது

சென்னை – 13 நவம்பர், 2026 ‘ எல்லைகளற்ற கதைகள்’ என்ற கருப்பொருளின் கீழ், 57- வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழா (ஐஎஃப்எஃப்ஐ), 2026 நவம்பர் 20 முதல் 28 வரை கோவாவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு, உலகம் முழுவதிலுமிருந்து திரைப்படத் தயாரிப்பாளர்கள், திரைப்பட ஆர்வலர்கள், படைப்பாற்றல் மிக்க கலைஞர்களை ஒன்றிணைக்கும்.

இந்த விழாவின் சிறப்பம்சங்களை எடுத்துரைக்கும் செய்தியாளர் சந்திப்பு, நவம்பர் 13 அன்று, கோவாவில் நடைபெறவுள்ளது. மாநில முதலமைச்சர் டாக்டர் பிரமோத் சாவந்த், கோவா பொழுதுபோக்கு சங்கத்தின் துணைத் தலைவர் டெலைலா லோபோ, தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் சஞ்சல் குமார், தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத் தலைவர் ஜி. கிருஷ்ணகுமார், நிர்வாக இயக்குநர் தீரஜ் சிங், ஐஎஃப்எஃப்ஐ 2026- ன் இயக்குநர் அசுதோஷ் கோவாரிகர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள்.



# இந்தியாவின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டாடும் பவோலி ஆர்ட் சங்கத்தின் தலைவராக அல்லு ஸ்நேகா ரெட்டி நியமனம்!



சென்னை – 13 நவம்பர், 2026 இந்தியாவின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டாடும் பவோலி ஆர்ட் சங்கத்தின் தலைவராக அல்லு ஸ்நேகா ரெட்டி நியமனம்! இந்தியாவின் முதல் படிக்கிணறு கலைக் கண்காட்சியான (Stepwell Art Biennale) பவோலி ஆர்ட் சங்கம் அமைப்பில், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியப் பிரிவின் தலைவராக அல்லு ஸ்நேகா ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் கலை மற்றும் கலாச்சாரத் தளத்தில் இந்தப் புதிய கூட்டணி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் பார்க்கப்படுகிறது. தனித்துவமான ஆடை அலங்காரம் மற்றும் கலை, கலாச்சாரம் மீது ஆர்வம் கொண்டவரான ஸ்நேகா ரெட்டியின் இந்த நியமனம், இந்தியாவின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் இந்த முயற்சிக்குப் புதிய பரிமாணம் கொடுத்துள்ளது. இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க படிக்கிணறுகளை மீண்டும் கவனத்திற்குக் கொண்டு வருவதை பவோலி ஆர்ட் சங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அவற்றின் கட்டடக்கலை நுணுக்கங்கள், கலாச்சார முக்கியத்துவம் மற்றும் நீர், கலை, நாகரிகம் ஆகியவற்றுக்கு இடையேயான காலத்தால் அழியாத தொடர்பை எடுத்துரைப்பதே இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும். இந்தக் கூட்டணியின் மூலம், இந்தியாவின் கலைப் பாரம்பரியத்தைக் கொண்டாடுவதோடு, நாட்டின் கலாச்சார வேர்கள் மற்றும் மரபுகள் குறித்த விழிப்புணர்வையும் அதிகரிக்கும் முயற்சியில் ஸ்நேகா ரெட்டி பங்கேற்கவுள்ளார். பவோலி ஆர்ட் சங்கம் வரும் டிசம்பர் 1 முதல் ஜனவரி 10 வரை நடைபெறவுள்ளது. இந்தியாவின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை ஒருங்கிணைத்து, நாட்டின் பெருமைமிக்க மரபைக் கொண்டாடும் தனித்துவமான நிகழ்வாக இது அமையவுள்ளது.




# லைகா புரொடக்ஷன்ஸ் வழங்கும், மணி ரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள ‘இஞ்சி வெல்லம்’ திரைப்படம் ஜனவரி 29, 2027 அன்று வெளியீடு!




சென்னை – 13 நவம்பர், 2026 லைகா புரொடக்ஷன்ஸ் வழங்கும், மணி ரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள 'இஞ்சி வெல்லம்' திரைப்படம் ஜனவரி 29, 2027 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. இந்தியத் திரையுலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் மணி ரத்னம் இயக்கத்தில், லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் 'இஞ்சி வெல்லம்' திரைப்படத்தின் உலகளாவிய திரையரங்க வெளியீட்டுத் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படம், அடுத்த வருடம் ஜனவரி 29 ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. லைகா புரொடக்ஷன்ஸ் மற்றும் இயக்குநர் மணி ரத்னம் கூட்டணி இதற்கு முன்பு 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தின் மூலம் பிரம்மாண்டமான வெற்றியை பதிவு செய்தனர். இந்தக் கூட்டணி தற்போது மீண்டும் இணைந்துள்ளது. இந்த முறை, மக்கள் செல்வன் விஜய் சேதுபதி மற்றும் சாய் பல்லவி முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்கும் மனதை வருடும் காதல் மற்றும் உறவுகளை மையமாகக் கொண்ட திரைப்படமாக 'இஞ்சி வெல்லம்' உருவாகியுள்ளது. தனது தனித்துவமான கதை சொல்லும் பாணியாலும், நேர்த்தியான திரைப்பட உருவாக்கத்தாலும் ஏராளமான வளரும் இயக்குநர்களுக்கும் சினிமா ரசிகர்களுக்கும் தொடர்ந்து உத்வேகம் அளித்து வருபவர் இயக்குநர் மணிரத்னம். ஒவ்வொரு புதிய படைப்பின் மீதும் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் அவரது இயக்கத்தில் உருவாகும் இப்படமும் கவனம் ஈர்த்துள்ளது. அதேபோல், திட்டமிட்ட கால அட்டவணைப்படி படப்பிடிப்பை நிறைவு செய்யும் அவரது பணித்திறனும் தயாரிப்பாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. தற்போது படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன இப்படத்தில் கன்னட நடிகை சைத்ரா ஆச்சாரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். பல மொழித் திரைப்படங்களில் தனது திறமையான நடிப்பால் கவனம் ஈர்த்து வரும் இவர், 'சப்த சாகரதாச்சே எல்லோ சைடு பி' உள்ளிட்ட திரைப்படம் மற்றும் 'மீசைய முறுக்கு 2', '3BHK', 'ரூம் நம்பர் 418' உள்ளிட்ட திரைப்படங்களிலும் நடித்துள்ளார். இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்கும் வகையில், ஆஸ்கர் விருது வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார். சமீபத்தில் வெளியிடப்பட்ட பிட்டிராக் பாடலுடன் கூடிய கிளிம்ப்ஸ் வீடியோ, கொல்கத்தாவின் அழகையும், படத்தின் தனித்துவமான காட்சியமைப்பையும் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் காட்சியமைப்பும் இசையும் ரசிகர்களிடையே கவனத்தைப் பெற்றுள்ளன. இதனால், படத்தின் முழுமையான இசை ஆல்பத்தைக் கேட்கும் ஆர்வமும் ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது. படத்தின் முதல் பாடல் வெளியீடு, இசை வெளியீட்டு விழா மற்றும் டிரெய்லர் குறித்த கூடுதல் அறிவிப்புகளைப் படக்குழுவினர் விரைவில் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நீர் பாதுகாப்பு மக்கள் பங்கேற்பு 2.0 இணையப்பக்கத்தில் கருத்துக்களைப் பதிவு செய்வதற்கான காலக்கெடு 2026 நவம்பர் 30 வரை நீட்டிப்பு

சென்னை – 13 நவம்பர், 2026 நீர் பாதுகாப்பு மக்கள் பங்கேற்பு 2.0 இணையப்பக்கத்தில் மக்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்வதற்கான காலக்கெடுவை 2026 நவம்பர் 30 வரை ஜல்சக்தி அமைச்சகம் நீட்டித்துள்ளது. இந்த இணையதளம் 2026 ஜனவரி முதல் மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நாடு முழுவதும் உள்ள குடிமக்கள் நீர் பாதுகாப்பு மக்கள் பங்கேற்பு 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் சேகரிப்பு, நீர் சேமிப்பு பணிகள் குறித்த தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த காலநீட்டிப்பின் மூலம் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட செயற்கை நீர் நிரப்புதல், சேமிப்பு அமைப்புகள் தொடர்பான மக்கள் தொடர்ந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இயலும். நீர் பாதுகாப்பு மக்கள் பங்கேற்பு இயக்கமானது 2.0 2024 செப்டம்பர் 6 அன்று குஜராத்தின் சூரத் நகரில் பிரதமர் கூறிய நாடு தழுவிய நீர் பாதுகாப்பு இயக்கத்தை முன்னெடுத்து செல்வதில் முக்கிய அம்சமாகும். மக்களின் தீவிர பங்களிப்பு மூலம் நீர் பாதுகாப்பை உண்மையான மக்கள் இயக்கமாக மாற்றுவது அதன் நோக்கமாகும். 2026 மே 31 அன்று நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1.5 கோடிக்கும் மேலான மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் நிரப்புதல், நீர் பாதுகாப்பு, நீர் சேமிப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டம்: 600 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகம்




சென்னை – 13 நவம்பர், 2026 மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறையால் 2019-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டம் பொது விநியோக நடைமுறையில் மிகப்பெரிய மாற்றத்தை மிகப்பெரிய ஏற்படுத்தியுள்ள சீர்திருத்த நடவடிக்கையாகும். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் புதிய குடும்ப அட்டை பெறாமலேயே நாட்டின் எந்தப் பகுதியிலும் உள்ள நியாயவிலைக் கடைகளில் தங்களுக்குரிய உணவு தானியங்களைப் பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. குறிப்பாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், இடம்பெயரும் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, பயனாளிகளை மையப்படுத்திய நலத்திட்ட விநியோக அமைப்பாக இது உருவெடுத்துள்ளது. நாடு முழுவதும் உள்ள 36 மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களிலும் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டப் பயனாளிகள் 100% இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், மாதந்தோறும் சுமார் 3.27 கோடி பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன. திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை மாநிலங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கு உள்ளேயும் 233 கோடிக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள் பதிவாகி, 614 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பொது விநியோக முறையில் வெளிப்படைத்தன்மையையும், நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் உணவு தானியங்கள் சென்றடைவதையும் உறுதி செய்ய மத்திய அரசு பல்வேறு தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2026 அக்டோபர் நிலவரப்படி, அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் சுமார் 78.65 கோடி பயனாளிகளின் விவரங்கள் 100 சதவீதம் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளன. மத்தியத் தொகுப்பில் உள்ள 20.51 கோடி குடும்ப அட்டைகளில் 98.8% ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 76.97 கோடி பயனாளிகளின் ஆதார் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், 2026 செப்டம்பர் 30 வரை 71.52 கோடி பயனாளிகளிடம் மின்னணு வாடிக்கையாளர் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன. நாடு முழுவதும் உள்ள 5.51 லட்சம் நியாயவிலைக் கடைகளில் 99.8 சதவீதக் கடைகளில் மின்னணு விற்பனை கருவிகள் செயல்பாட்டில் உள்ளன. விவரங்கள் சரிபார்ப்பின் மூலம் தகுதியற்ற, போலிப் பதிவுகள் கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டத்தில் 2.58 கோடி போலிப் பதிவுகளும், அடுத்த கட்டத்தில் 68 லட்சம் பதிவுகளும் நீக்கப்பட்டு தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு உணவு தானியங்கள் சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2031 மார்ச் 31 வரை செயல்படுத்தப்படும் ‘சார்த்தக்’ - பொது விநியோகத் திட்டத்தின் கீழ், கொள்முதல் முதல் விநியோகம் வரை தரவுக் கட்டமைப்பு, வாகன கண்காணிப்பு அமைப்பு ஆகிய நடைமுறைகள் நிர்மல், சக்ஷம் ஆகிய முன்னெடுப்புகள் மூலம் வலுப்படுத்தப்படுகின்றன. பயனாளிகள் தங்களுக்குரிய மாதாந்திர உணவு தானிய ஒதுக்கீடு, முந்தைய பரிவர்த்தனை விவரங்கள், ஆதார் இணைப்பு நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், அருகிலுள்ள நியாயவிலைக் கடைகளை ஜிபிஎஸ் மூலம் கண்டறியவும் 13 மொழிகளில் ‘மேரா ரேஷன்’ கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பச் சீர்திருத்தங்கள் மூலம் நாடு முழுவதும் உள்ள பயனாளிகள் தாங்கள் வசிக்கும், பணிபுரியும் இடங்களிலேயே உணவு தானியங்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது நாட்டின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

# மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ், 2026-தீபாவளி பண்டிகை கொண்டாட்டகால சிறப்பு சலுகைகளை அறிமுகப்படுத்துகிறது

சென்னை – 13 நவம்பர், 2026: உலகின் நான்காவது மிகப்பெரிய பொறுப்பு மிக்க ஆபரணங்கள் மற்றும் நகை விற்பனையாளருமான' மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனம், வாடிக்கையாளர்கள் இந்த தீபாவளித் திருநாளை அதன் உணர்வு குன்றாமல் மிகுந்த உற்சாகத்துடன் அனுபவித்து கொண்டாடி மகிழும் வண்ணம், கண்ணைக்கவரும் நேர்த்தியான கோல்டு, டைமண்ட், அன்கட், போல்கி மற்றும் ஜெம்ஸ்டோன் ரக ஆபரணங்களுக்கு தனிப்பட்ட தீபாவளி பண்டிகை கால சலுகைகளை வழங்குவதோடு அத்துடன் சேர்த்து கவர்ச்சிகரமான பண்டிகைக் கால சிறப்பு பலங்களையும் வழங்குகிறது. குறிப்பாக பண்டிகை கொண்டாட்ட காலம் மற்றும் திருமணப் பரிசளிப்புக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர் வரும் 2026 நவம்பர் 15 ஆம் தேதி வரை அனைத்து மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூம்களிலும் வழங்கப்படும் இந்தச் சலுகைகள், இந்த கொண்டாட்டகாலத்தில் நகை வாங்கும் அனுபவத்தை மேலும் பயனுள்ளதாகவும், நினைவை விட்டு அகலாத ஒரு உணர்வு பூர்வமான அனுபவமாகவும் மாற்றும்.

வாடிக்கையாளர்கள் தங்கம், அன்கட் மற்றும் ஜெம்ஸ்டோன் கற்கள் பதித்த நகைகளின் சேதாரத்தில் 30% வரையிலும், வைரத்தின் மதிப்பில் 30% வரையிலும் தள்ளுபடி பெறலாம். பண்டிகைக் காலச் சலுகைகளின் ஒரு பகுதியாக, வாடிக்கையாளர்கள் வாங்கும் மதிப்பில் வெறும் 10% முன்பணமாகச் செலுத்தி, தங்களது நகைகளை முன்கூட்டியே முன்பதிவு செய்யலாம். வாங்கும் நேரத்தில், வாடிக்கையாளர்கள் முன்பதிவு செய்யப்பட்ட தங்க விலை அல்லது நடைமுறையில் உள்ள விலை, இவற்றில் எது குறைவோ அதைச் செலுத்தலாம். இது, தங்கத்தின் விலை குறைந்தால் வாடிக்கையாளர்கள் குறைந்த விலையிலிருந்து பயனடையவும், விலை உயர்வுகளுக்கு எதிரான பாதுகாப்பைப் பெறவும், உதவுகிறது. அனைத்து சலுகைகளும் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ், பண்டிகைக் காலம் அத்துடன் இணைந்து வரும் அனைத்து பல்வேறு கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு விரிவான ஆபரண வடிவமைப்பு ரகங்களின் கலெக்சன், தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கான அர்ப்பணிப்பு போன்றவற்றுக்கு புகழ்பெற்று விளங்கும் இந்த பிராண்ட், பண்டிகை கால கொண்டாட்ட நிகழ்வுகள், திருமணங்கள் மற்றும் பரிசு வழங்கல்களுக்கான சிறந்த ஆபரணங்களை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்கிறது.


இந்த பண்டிகைக்காலச் சிறப்பு சலுகைகள் குறித்து தனது கருத்தை தெரிவித்த M.P. அஹம்மத், சேர்மன், மலபார் குரூப் கூறினார். “தீபாவளி திருநாள் என்பது ஒன்றிணைந்திருத்தல் மற்றும் புதிய தொடக்கங்களுக்கான ஒரு மகிழ்ச்சிகரமான கொண்டாட்ட காலமாகும், மற்றும் இந்த கொண்டாட்ட காலத்தில் நகைகளுக்கு ஒரு சிறப்பான இடத்தை வகிக்கின்றன. எங்களின் 2026 தீபாவளி கொண்டாட்ட கால சலுகைகள் மூலம், பல்வேறு நகை வகைப்பிரிவுகள் முழுவதிலும் கவர்ச்சிகரமான பலன்களை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி, இந்தப் பண்டிகைக் காலத்தை அவர்களுக்கு மேலும் அர்த்தமுள்ளதாகச் செய்து மனநிறைவடையச் செய்வதை எங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். விலை நிர்ணயம் செய்வதில் வெளிப்படைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்வதில் எங்களுக்குள்ள அர்ப்பணிப்பு ஆகியவையே எங்கள் அனைத்து செயல்பாடுகளிலும் மையமாக அமைந்துள்ளது மற்றும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து எங்கள் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையே மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் உடனான ஒவ்வொரு கொண்டாட்டத்தையும் உண்மையிலேயே மிகச் சிறப்பு மிக்கதாக மாற்றுவதற்கான மன எழுச்சியை எங்களுக்கு அளிக்கிறது.”

பண்டிகைக்காலச் சிறப்புச் சலுகைகளுக்கும் அப்பால், நியாயமான விலை மற்றும் தரத்தை உறுதி செய்வதை, மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தொடர்ந்து வலுயுறுத்தி வருகிறது. ஒரே சீரான, வெளிப்படைத்தன்மை யோடுடனான மதிப்பை வாடிக்கையாளர்களுக்கு உறுதி செய்யும் வகையில் இந்தியா முழுவதிலுமுள்ள அதன் அனைத்துக் விற்பனை நிலையங்களிலும் கோல்டு ஒரே விலையில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. அதன் நகைகள் பொறுப்புடன் கொள்முதல் செய்யப்பட்டு, HUID ஹால் மார்க் முத்திரையிடப்பட்டு, தரம் சரிபார்க்கப்படும் நடைமுறைகள், பொருட்களை தன்னம்பிக்கையோடு வாங்க வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது.

இந்தத் தீபாவளி கொண்டாட்ட காலத்தின் போது, பல்வேறு ஆபரணங்களின் கலெக்சன்களை காணவும், பண்டிகைக்காலச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், தங்களுக்கு அல்லது தங்கள் அன்புக்குரியவர்களுக்கு கச்சிதமாகப் பொருந்தக் கூடிய நகைகளை கண்டறியவும் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமிற்கு வருகை தரலாம்.

வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும், பலன்களும் பொருந்தத்தக்க விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

# கோவா திரைப்பட விழாவில் வேவ்எக்ஸ் புத்தொழில் அரங்கில் பங்கேற்க பதிவு செய்வதற்கு நாளை கடைசி நாளாகும்




சென்னை – 13 நவம்பர், 2026 கோவாவில் நடைபெற உள்ள 57-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக வேவ்ஸ் பஜாரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேவ்எக்ஸ் புத்தொழில் அரங்கில் பங்கேற்க தகுதியுடைய நிறுவனங்கள் தங்களுடைய பதிவை நிறைவு செய்யவும், கண்காட்சி பகுதிகளை முன்பதிவு செய்யவும் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் நினைவுபடுத்தியுள்ளது. இதற்கான முன்பதிவு நாளை நவம்பர் 13 அன்று நிறைவடைகிறது.

அமைச்சகத்தின் முன்னோடி புத்தொழில் திட்டமான வேவ்எக்ஸ்-ன் கீழ் திரைப்படம், ஊடகம், அது சார்ந்த தொழில்நுட்ப துறைகளில் (அனிமேஷன், விசுவல் எஃபெக்ட்ஸ், கேமிங், காமிக்ஸ், எக்ஸ்டெண்டெட் ரியாலிட்டி உட்பட) செயல்படும் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில்மேம்பாட்டுத் துறையில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் தங்களுடைய தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள், புதுமைக் கண்டுபிடிப்பு தீர்வுகளை இந்நிகழ்வில் காட்சிப்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வேவ்எக்ஸ் புத்தொழில் அரங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களுக்கு வேவ்ஸ் பஜாரில் தங்களுடைய கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்த வாய்ப்பளிக்கும். உலகளாவிய ஊடக, பொழுதுபோக்குத் துறையைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் வருகை தரவுள்ள இந்த இடம் சிறந்த கட்டமைப்பு மையமாக அமையும். அத்துடன் உள்நாட்டு, சர்வதேச திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள், படப்பிடிப்பு அரங்குகள் மற்றும் முதலீட்டாளர்களுடன் உரையாடவும் அதன் மூலம் புதிய ஒத்துழைப்புகள் வணிக கூட்டாண்மைகளை உருவாக்கவும் இது புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறந்த வாய்ப்பாகும்.

கோவாவில் 57-வது இந்திய சர்வதேச திரைப்பட விழா 2026 நவம்பர் 20 முதல் 28 வரை நடைபெறவுள்ளது. இதில் வேவ்ஸ் பஜார் கண்காட்சி 2026 நவம்பர் 20 முதல் 24 வரை நடைபெறவுள்ளது.

# மாணவர்கள் உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து தங்கள் கனவுகளை நனவாக்க உழைக்க வேண்டும் – குடியரசுத் தலைவர்



சென்னை – 13 நவம்பர், 2026 குடியரசுத் தலைவர் மாளிகையில் ஏகலைவா மாதிரி உண்டு, உறைவிட பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் குழுவுடன் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு இன்று (2026 நவம்பர் 12) உரையாடினார். பகவான் பிர்சா முண்டாவின் பிறந்ததினத்தையொட்டி ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படும் பழங்குடியின கௌரவ இயக்கத்தின் ஒரு பகுதியாக பழங்குடியினர் நல அமைச்சகம் இந்த உரையாடலுக்கு ஏற்பாடு செய்தது.

அப்போது மாணவர்களிடையே உரையாற்றிய குடியரசுத் தலைவர், 2047-ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய நாடு முன்னோக்கி சென்று கொண்டிருப்பதாக தெரிவித்தார். நாட்டின் ஒவ்வொரு பிராந்தியமும், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவும் வளர்ச்சியடைவது அவசியம் என்று கூறினார். ஏகலைவா மாதிரி உண்டு, உறைவிட பள்ளிகள், பழங்குடியினர் மாணவர்களுக்கு தரமான கல்வியை அளிப்பது மட்டுமின்றி, அவர்களுடைய பன்முக திறன்களை மேம்படுத்த வாய்ப்பளிப்பதாக குறிப்பிட்டார். நமது நாட்டின் திறமைக்கு குறைவில்லை என்று தெரிவித்த அவர், உரிய வாய்ப்புகளும், சாதமான சூழ்நிலைகளும், முறையான வழிகாட்டுதலும் மாணவர்களுக்கு தேவைபடுவதாக கூறினார். ஏகலைவா மாதிரி உண்டு, உறைவிட பள்ளிகளில் மாணவர்களும், மாணவிகளும் சம எண்ணிக்கையில் பயின்று வருவது மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டார். இது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய நாட்டின் முன்னேற்றத்திற்கு சான்றாகும் என்று தெரிவித்தார்.

மாணவர்கள் உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து அர்ப்பணிப்பு, ஒழுக்கம், தன்னம்பிக்கை ஆகியவற்றுடன் தங்கள் கனவுகளை நனவாக்க உழைக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். கல்வி என்பது வெறும் வாழ்வாதரத்திற்கான கருவியாக மட்டுமின்றி தாங்கள் பெற்ற அறிவின் மூலம் மற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மாணவர்கள் செயல்பட வேண்டும் என்று கூறினார். இளைஞர்கள் வேலை அளிப்பவர்களாக திகழும் போது நாட்டின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மேலும் விரைவு பெறும் என்று தெரிவித்தார்.

# எலக்ட்ரிக் சிறிய வணிக வாகனங்கள் மற்றும் பிக்கப் உரிமையைப் எளிதாக்கக் கூட்டு சேர்ந்துள்ள Tata Motors மற்றும் Turno

சென்னை – 13 நவம்பர், 2026: இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகனத் தயாரிப்பு நிறுவனமான Tata Motors, தனது எலக்ட்ரிக் சிறிய வணிக வாகனங்கள் மற்றும் பிக்கப் (e-SCVPU) வாடிக்கையாளர்களுக்கு பிரத்யேக நிதியுதவித் திட்டங்களை வழங்குவதற்காக, இந்தியாவின் முதல் பேட்டரி பேட்டரி நுண்ணறிவு மற்றும் ஆயுள் மேலாண்மை நிறுவனமான Finzo EV Solutions Pvt. Ltd. (Turno) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது. இந்த கூட்டாண்மையின் கீழ், Tata Motors வாடிக்கையாளர்களுக்கு விரைவான கடன் வழங்கல், நெகிழ்வான திருப்பிச்செலுத்தும் திட்டங்கள் மற்றும் 25% உத்தரவாதமளிக்கப்பட்ட திரும்பப் பெறும் வசதி (buyback guarantee) ஆகியவை கிடைக்கும்.

இந்த நிகழ்வில் பேசிய டர்னோவின் இயக்குநர் வருண் நாயர் அவர்கள், "Turno-வில், EV வாங்கும் பயணத்தை எளிமையாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுவதன் மூலம் இந்தியா முழுவதும் பசுமையான, பூஜ்ஜிய உமிழ்வு (zero-emission) மொபிலிட்டியைக் கொண்டுவருவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். எலக்ட்ரிக் வணிக மொபிலிட்டி வேகம் பெற்று வரும் நிலையில், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வாகனத்தின் வாழ்நாள் மதிப்பைப் பற்றிய தெளிவும் உத்தரவாதமும் தேவைப்படுகிறது. Tata Motors உடனான எங்கள் கூட்டாண்மை, வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற நிதியுதவி மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட திரும்பப் பெறும் ஆதரவை ஒன்றிணைத்து, இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு எலக்ட்ரிக் மொபிலிட்டிக்கு மாறுவதை எளிதாக்குகிறது. பேட்டரி இன்டெலிஜென்ஸ் மற்றும் EV லைஃப்சைக்கிள் மேனேஜ்மென்ட்டில் உள்ள எங்கள் நிபுணத்துவம் மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட திரும்பப் பெறும் திட்டத்தைப் பயன்படுத்தி, எலக்ட்ரிக் வணிக வாகனங்களின் பயன்பாடு மற்றும் மறுவிற்பனைப் பயணத்தில் அதிக நம்பிக்கையை உருவாக்குகிறோம்" என்று கூறினார்.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த டாடா மோட்டார்ஸ் லிமிடெட்டின் துணைத் தலைவர் மற்றும் SCVPU வணிகப் பிரிவுத் தலைவர் பினாகி ஹல்தார் அவர்கள், "தூய்மையான மொபிலிட்டியை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதிலும், இந்தியாவின் நிலையான லாஸ்ட்-மைல் லாஜிஸ்டிக்ஸ் மாற்றத்தை விரைவுபடுத்துவதிலும் Tata Motors உறுதியுடன் உள்ளது. எங்கள் e-SCVPU வரம்பு சிறந்த செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் இயக்கச் செலவுச் சேமிப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், வாகன உரிமை எளிதாகவும், கணிக்கக்கூடியதாகவும், கவலையற்றதாகவும் மாறும் போதுதான் அதன் பயன்பாடு உண்மையாக அதிகரிக்கும். Turno உடனான எங்கள் கூட்டாண்மை, வாடிக்கையாளர்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குவதன் மூலம் நமது EV அமைப்பை வலுப்படுத்துகிறது. நிதி தடைகளை நீக்கி, நீண்டகால மறுவிற்பனை மதிப்பைப் பாதுகாப்பதன் மூலம், நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் பூஜ்ஜிய உமிழ்வு மொபிலிட்டிக்கு மாற நாங்கள் வழிவகுக்கிறோம்" என்று கூறினார்.




பல்வேறு சரக்கு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் Ace Pro EV, Ace EV 1000 மற்றும் Intra EV Pickup உட்பட பலதரப்பட்ட லோட் டெக் அமைப்புகள் மற்றும் பேலோட் தேர்வுகளில் கிடைக்கும் மிகப்பரந்த e-SCVPU மாடல்களுடன் Tata Motors இந்தியாவின் எலக்ட்ரிக் வணிக வாகன மாற்றத்தில் தொடர்ந்து முன்னணியில் உள்ளது. இந்த வாகனங்களுக்கு 150-க்கும் மேற்பட்ட நகரங்களில் 25,000-க்கும் அதிகமான பொது சார்ஜர்கள், அதிக இயங்குநேரத்திற்காக (uptime) நாடு முழுவதும் 200-க்கும் மேற்பட்ட பிரத்யேக EV ஆதரவு மையங்கள், சம்பூர்ண சேவா 2.0-வின் கீழ் விரிவான ஆயுட்காலப் பராமரிப்பு, Tata Motors-ன் இணைக்கப்பட்ட வாகன தளமான ஆன ஃபிலீட் எட்ஜ் மூலமாக ஃபிலீட் மேனேஜ்மென்ட், மற்றும் முன்னணி வங்கிகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFC) மற்றும் மொபிலிட்டி நிதியாளர்களுடனான மூலோபாய கூட்டாண்மைகள் உள்ளிட்ட முழுமையான ஆதரவு அமைப்பு உறுதுணையாக உள்ளது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

# புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு நவீன உத்திகளைப் பின்பற்ற வேண்டும் – பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்




சென்னை – 13 நவம்பர், 2026 விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நவீன போர் முறையில் மாறிவரும் சூழலால் ஏற்படும் வழக்கமான, புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு முப்படையினரும் திடீர் தாக்குதல் என்ற உத்தியையும், தற்காப்பு அம்சங்களையும் வலுப்படுத்தி தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். 2026 நவம்பர் 12 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விமானப்படை தளபதிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர் உளவு, கண்காணிப்பு திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்தவும், பல்வேறு அமைப்புகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கண்டறிய வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

நமது முப்படையினர் அதுபோன்ற திறன்களையும், வழிமுறைகளையும் உருவாக்க வேண்டும் என்று கூறினார். எதிரி செயல்படவோ அல்லது மீண்டு வரவோ அவகாசம் அளிக்கக்கூடாது என்று தெரிவித்தார். திடீர் தாக்குதல் என்பது வழக்கமான முறைகள் அல்லது மின்னணு முறைகளில் என்று பல வடிவங்களில் இருக்கலாம். நம்முடைய உளவு, கண்காணிப்பு அமைப்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். நமது வீரர்கள் புதிய சவாலை எதிர்கொள்ளும் வகையில் விழிப்புடனும், சுறுசுறுப்பாகவும், தயார்நிலையில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தற்போதைய மோதல்கள் பாரம்பரிய போர் முறைகளுக்கு அப்பால் நேரடி தொடர்பற்ற தளங்களாக விரிவடைந்துள்ளன என்றும் இவற்றின் ஏவுகணைகள், ட்ரோன்கள், நவீன ஆயுத அமைப்பு முறைகள், முக்கிய பங்களிப்பதாக ராஜ்நாத் சிங் கூறினார். ரஷ்யா – யுக்ரைன், இஸ்ரேல் – ஹமாஸ் மோதல்கள் குறித்து சுட்டிக்காட்டிய அவர், நவீன போர் முறையில் ட்ரோன்களும், வான்பாதுகாப்பு அமைப்புகளும் மிக முக்கிய அம்சங்களாக உருவெடுத்துள்ளதாக தெரிவித்தார். காமிகாசே ட்ரோன்கள், கண்காணிப்பு முறைகள், ட்ரோன் எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்ற புதிய சவால்களை எதிர்கொள்ள தயாராக இருக்குமாறும் தளபதிகளுக்கு அறிவுறுத்தினார்.

# ஆஸ்கர் விருதுக்கான இந்தியாவின் பரிந்துரையாக, சந்தோஷ் தாவாகர் இயக்கத்தில், இசைஞானி இளையராஜா இசையில், நவம்பர் 13 ஆம் தேதி வெளியாகவுள்ள, சைக்கலாஜிக்கல் த்ரில்லர் கதையாக உருவாகியுள்ள 'கோந்தல்' திரைப்படத்தின் உலகளாவிய டிரெய்லர் வெளியானது!

சென்னை – 13 நவம்பர், 2026 ஆஸ்கர் விருதுக்கான இந்தியாவின் பரிந்துரையாக, சந்தோஷ் தாவாகர் இயக்கத்தில், இசைஞானி இளையராஜா இசையில், நவம்பர் 13 ஆம் தேதி வெளியாகவுள்ள, சைக்கலாஜிக்கல் த்ரில்லர் கதையாக உருவாகியுள்ள 'கோந்தல்' திரைப்படத்தின் உலகளாவிய டிரெய்லர் வெளியானது!

இந்தியாவின் ஆஸ்கர் விருதுக்கான அதிகாரப்பூர்வப் பரிந்துரையான 'கோந்தல்' திரைப்படம், இந்தி, மராத்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஏழு மொழிகளில் நாளை (நவம்பர் 13) திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்தியாவின் 99 ஆவது ஆஸ்கர் விருதுக்கான அதிகாரப்பூர்வப் பரிந்துரைப் படமான சந்தோஷ் தாவகார் இயக்கிய 'கோந்தல்' திரைப்படத்தின் சர்வதேச டிரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது. இப்படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார்.

உளவியல் த்ரில்லர் பாணியில் உருவாகியுள்ள இப்படத்தின் கதைக்களம், மர்மம் நிறைந்த காட்சிகள் மற்றும் மகாராஷ்டிராவின் பாரம்பரியக் கலாசாரப் பின்னணியை டிரெய்லர் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. ஒரு மராத்தி திரைப்படம் ஏழு மொழிகளில் மறுவெளியீடு செய்யப்பட்டு, உலகளாவிய அளவில் திரையரங்குகளில் வெளியாக இருப்பது இதுவே முதல்முறை எனப் படக்குழு தெரிவித்துள்ளது.

இந்தியா மட்டுமின்றி அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, துபாய் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிலும் இப்படம் வெளியாகிறது.

மகாராஷ்டிராவின் கலாச்சாரப் பின்னணியில் உருவாகியுள்ள இப்படம், புதுமணத் தம்பதிகளான சுமன் மற்றும் ஆனந்த்ராவை மையமாகக் கொண்டு நகர்கிறது. ஆசை, கடமை, பக்தி ஆகியவை ஒன்றோடொன்று மோதும்போது அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத திருப்பங்களே கதையின் மையம். மணமகளின் ஏக்கம், கணவனின் கடமைகள் மற்றும் அடுத்தடுத்து நிகழும் மர்மமான சம்பவங்கள் என இருவரும் புரியாத புதிர்கள் நிறைந்த சுழலுக்குள் சிக்கிக் கொள்கின்றனர்.

வெளிப்படையாகத் தெரிவது உண்மையாக இருக்குமா என்ற கேள்வியையும், உண்மையின் மற்றொரு முகத்தையும் படம் ஆராய்கிறது. பதற்றமான காட்சிகள், மர்மம் நிறைந்த பின்னணி மற்றும் தனிப்பட்ட ஆசைகளுக்கும் சமூகக் கடமைகளுக்கும் இடையே சிக்கித் தவிக்கும் உறவு என டிரெய்லர் படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கிறது.


மகாராஷ்டிராவின் பாரம்பரியக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய பார்வையாளர்களைக் கவரும் உளவியல் கதையம்சத்தையும் இயக்குநர் சந்தோஷ் தாவகார் இணைத்துள்ளார். படம் குறித்து இயக்குநர் சந்தோஷ் தாவகார் பகிர்ந்து கொண்டதாவது, "இந்தியத் திரைப்படங்கள் குறித்த உலகளாவிய பார்வை பெரும்பாலும் வறுமை மற்றும் சாதிய மோதல்கள் சார்ந்த கதைகளால் உருவாக்கப்படுகிறது. அவைதான் கள யதார்த்தம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அவை மட்டுமே இந்தியாவின் முழுமையான அடையாளம் அல்ல. 'கோந்தல்' வெறும் திரைப்படம் மட்டுமல்ல! தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களின் சங்கமம். இந்தப் பாரம்பரியத்தை உலகம் அறிந்துகொள்ளச் செய்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆஸ்கர் விருதுகள் போன்ற சர்வதேசத் திரைப்பட விழாக்கள், நமது கலாச்சாரத்தை இந்தியாவைத் தாண்டி உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கொண்டு செல்லத் திரைப்பட இயக்குநர்களுக்கு உதவுகின்றன" என்றார். 99 ஆவது ஆஸ்கர் விருதுகளுக்கான பயணத்தில் முன்னேறி வரும் 'கோந்தல்', சிறந்த சர்வதேசத் திரைப்படம் பிரிவில் இந்தியாவின் அதிகாரப்பூர்வப் பரிந்துரையாக இடம்பெற்றுள்ளது.


மேலும், பல்வேறு பிரிவுகளிலும் இப்படம் பரிசீலிக்கப்பட்டு வருவது சர்வதேச அங்கீகாரத்தை நோக்கிய அதன் பயணத்தில் மற்றொரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. 56 aaவது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவில் (IFFI) சிறந்த இயக்குநருக்கான Silver Peacock விருதை சந்தோஷ் தாவகார் வென்றுள்ளார்.



இப்படத்தைப் பார்த்த நடுவர் குழுவினர் நிஜ உலகத்தில் அமைந்த ஷேக்ஸ்பியரின் கதை போல உள்ளது என்று பாராட்டியுள்ளனர். இஷிதா தேஷ்முக், கிஷோர் கதம், யோகேஷ் சோஹானி மற்றும் நிஷாத் போயர் உள்ளிட்டோர் இப்படத்தில் நடித்துள்ளனர். இயக்குநர் சந்தோஷ் தாவகார், தனது தயாரிப்பு நிறுவனமான தாவகார் ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் தீக்ஷா தாவகாருடன் இணைந்து இப்படத்தைத் தயாரித்துள்ளார். பிராந்தியக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன், ஒளிப்பதிவு, ஒலி வடிவமைப்பு, இசை மற்றும் நடிப்பு என அனைத்துத் தொழில்நுட்ப அம்சங்களிலும் உயர்தரமான படைப்புகளை வழங்குவதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அமலேந்து சௌத்ரி இப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். படத்தின் தொடக்கத்திலேயே 25 நிமிடங்கள் இடைவெளியின்றி ஒரே ஷாட்டில் படமாக்கப்பட்ட காட்சி இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 99 ஆவது ஆஸ்கர் விருதுகளுக்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வப் பரிந்துரையாகத் தேர்வானதைத் தொடர்ந்து, தற்போது வெளியாகியுள்ள சர்வதேச டிரெய்லர், உளவியல் மர்மங்கள் மற்றும் கலாசாரச் சிக்கல்கள் நிறைந்த 'கோந்தல்' திரைப்படத்தின் தனித்துவமான உலகத்தைப் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.


# கேந்திரிய வித்யாலயா அமைப்பின் முன்னோடி டிஜிட்டல் திட்டங்கள்: மத்திய கல்வி அமைச்சர் தொடங்கி வைத்தார்




சென்னை – 13 நவம்பர், 2026 மத்திய கல்வி அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி, கேந்திரிய வித்யாலயா அமைப்பின் 3 முன்னோடி டிஜிட்டல் திட்டங்களை புதுதில்லியில் இன்று (2026 நவம்பர் 12) தொடங்கி வைத்தார். செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட 'சமிக்ஷா' செயற்கை நுண்ணறிவு செயலி, பெற்றோர்களை இணைக்கும் கேவிஎஸ்-சம்வாத் கைப்பேசி செயலி, இணையதளம், கேவிஎஸ் முன்னாள் மாணவர்கள் ஒருங்கிணைப்புக்கான இணையதளம் ஆகியவை இதில் அடங்கும். தேசிய கல்விக் கொள்கை 2020-ன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலும், டிஜிட்டல் இந்தியா தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் இத்திட்டங்கள் அமைந்துள்ளதாக அமைச்சர் பாராட்டினார்.

மத்திய கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையுடன் இணைந்து கேந்திரிய வித்யாலயா பள்ளிகளைக் கடந்து, நாட்டின் ஒட்டுமொத்த பள்ளிக் கல்விச் சூழலமைப்பில் இணைந்துள்ள மாணவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.



வருகைப்பதிவு, பாடத்திட்ட முன்னேற்றம், தேர்வு முடிவுகள், டிஜிட்டல் அடையாள அட்டைகளைப் பெறுவதுடன், சான்றிதழ்கள், விடுப்பு ஆகியவற்றிற்கும் இணையவழியில் விண்ணப்பிக்கலாம். முன்னாள் மாணவர்களுக்கான இணையதளம் மூலம் முன்னாள் மாணவர்கள் தங்கள் பள்ளிகளுடன் மீண்டும் இணைந்து வழிகாட்டுதல், நிறுவன மேம்பாட்டிற்குப் பங்களிக்க முடியும். கேந்திரிய வித்யாலயா தலைமையகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ள இத்தளங்கள், கல்விச் சேவைகளை எளிதாகவும், வெளிப்படையாகவும் மாற்றுகின்றன.

# 'டைம் டிராவல்' இப்போது ஹெல்த் இன்சூரன்ஸிலும்! நாட்டின் இளம் தலைமுறையினருக்காக 'யங் ஸ்டார் நியோ' காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்தது ஸ்டார் ஹெல்த்!

சென்னை – 13 நவம்பர், 2026: ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (NSE: STARHEALTH; BSE: 543412), இளம் தொழில் வல்லுநர்கள், திருமணமான தம்பதிகள் மற்றும் வளர்ந்து வரும் குடும்பங்களின் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட 'யங் ஸ்டார் நியோ' (Young Star NEO) எனும் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் அறிமுகத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சமான 'டைம் டிராவல்' (Time Travel), இளம் வயதிலேயே காப்பீட்டைப் பெறுவதன் மூலம் பிரீமியம் தொகையில் வயது சார்ந்த சலுகையை இந்தியக் காப்பீட்டுத் துறையிலேயே முதன்முறையாக வழங்குகிறது. மேலும், வாடிக்கையாளர்கள் தங்களின் முதல் வேலையிலிருந்து திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை நிலைக்கு மாறும்போது, இக்காப்பீடு தொடர்ந்து அவர்களுக்குப் பயன்படும் வகையில் வெளிநோயாளி பராமரிப்பு, மனநல மேலாண்மை, உடற்பயிற்சி மையங்களுக்கான அணுகல் மற்றும் வெல்னஸ் வெகுமதிகள் போன்ற நன்மைகளையும் ஒருங்கிணைத்து வழங்குகிறது.

இளம் வயதிலேயே மருத்துவ காப்பீடு எடுக்கும் முடிவை, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தாண்டிய தேவைகளான — மருத்துவரைக் கலந்தாலோசித்தல், மனநல உதவி பெறுதல், சுறுசுறுப்பான உடற்பயிற்சி மற்றும் பிற்காலத்தில் வாழ்க்கைத் துணையையும் காப்பீட்டில் சேர்த்தல் போன்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 18 முதல் 40 வயது வரையிலான நபர்களுக்குக் கிடைக்கக்கூடிய 'யங் ஸ்டார் நியோ', ₹10 லட்சம் முதல் ₹1 கோடி வரையிலான காப்பீட்டுத் தொகை (வரம்பில்லா காப்பீட்டுத் தொகையைத் தேர்வு செய்யும் வசதியுடன்) மற்றும் ஒன்று, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கான பாலிசி கால அளவுகளையும் வழங்குகிறது.

தொழில்துறையிலேயே முதன்முறை: 'டைம் டிராவல்' பிரீமியம் பாதுகாப்பு

யங் ஸ்டார் நியோ-வின் 'டைம் டிராவல்' என்ற தொழில்துறையின் முதல் அம்சமானது, வாடிக்கையாளர்களின் பாலிசி புதுப்பித்தல் பிரீமியம் தொகையை (காப்பீட்டுக் கோரல் செய்யப்படும் வரை) மாறாமல் நிலையாக வைத்திருக்க உதவுகிறது. மேலும், காப்பீட்டுக் கோரல் (Claim) செய்த பிறகும் கூட, புதுப்பித்தலின் போது வாடிக்கையாளரின் அப்போதைய உண்மையான வயதிற்கு ஏற்ப பிரீமியம் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக, அவர் பாலிசியில் இணைந்த வயது + 1 ஆண்டு (Entry Age + 1 year) என்ற அடிப்படையிலேயே பிரீமியம் கணக்கிடப்படும் (பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு உட்பட்டது).

பெரும்பாலான வயது-அடிப்படையிலான பிரீமியம் லாக் (Age-lock) அம்சங்கள் முதல் கிளைம் உடனேயே முடிவுக்கு வந்துவிடும். ஆனால், அவை எங்கு முடிகிறதோ அங்கிருந்தே இந்த 'டைம் டிராவல்' அம்சம் தொடங்குகிறது.

புதிய அறிமுகம் குறித்து ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைடு இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி (MD & CEO) ஆனந்த் ராய் பேசுகையில்:

"வாழ்க்கை முன்னோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறது, ஆனால் உங்கள் பிரீமியத்தைக் கணக்கிடப் பயன்படும் வயது எப்போதும் அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு ஒரு கால இயந்திரம் (Time machine) தேவையில்லை — இளம் வயதிலேயே காப்பீடு தொடங்குவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும் ஒரு ஹெல்த் இன்சூரன்ஸ் மட்டுமே போதுமானது. யங் ஸ்டார் நியோ-வின் 'டைம் டிராவல்' அம்சத்தின் மூலம், 24 வயதில் இணையும் ஒருவரது புதுப்பித்தல் பிரீமியம், அவர் 25, 35, 45 என வயதாகிக் கொண்டே சென்றாலும், பாலிசி விதிமுறைகளுக்கு உட்பட்டு 25 வயது என்ற அடிப்படையிலேயே கணக்கிடப்படும். உங்கள் பிரீமியம் வயதைப் பின்னோக்கி நகர்த்துவது என்பதில் நாங்கள் குறிப்பிடுவது இதையே தான். உங்கள் வாழ்க்கை மாறும்போது, இளம் வயதிலேயே ஹெல்த் இன்சூரன்ஸ் வாங்குவது முதன்மை தேர்வாக இருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

எப்போதோ ஒருநாள் தேவைப்படக்கூடிய மருத்துவமனை சிகிச்சையை மட்டும் நோக்கமாகக் கொண்டு உங்கள் முதல் பாலிசி அமைந்திருக்கக் கூடாது. அது ஒரு மருத்துவரைத் தொடர்பு கொள்ளவும், உங்கள் மனநலத்தைப் பேணவும், உங்களைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளவும் உதவுவதோடு— பிற்காலத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையை பாலிசியில் சேர்க்க விரும்புவதையும் அங்கீகரிப்பதாக இருக்க வேண்டும். தனித்துவமான சுகாதாரக் காப்பீட்டுத் துறையில் முன்னோடியாக விளங்கும் நாங்கள், டைம் டிராவல் (Time Travel), ஃபியூச்சர் ஷீல்ட் (Future Shield) மற்றும் ஸ்டார் த்ரைவ் (Star THRIVE) ஆகியவற்றின் மூலம் இந்தத் தேவைகளை ஒன்றாகக் கொண்டு வருகிறோம்.

வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் உள்ள மக்களுக்கு இக்காப்பீட்டை மிகவும் பயனுள்ளதாக்கவும், மேலும் பல இளைஞர்களை இளம் வயதிலேயே காப்பீடு எடுக்க ஊக்குவிக்கவும், சுகாதாரக் காப்பீட்டின் பரவலை விரிவுபடுத்தவும் நாங்கள் விரும்புகிறோம்," என்று கூறினார்.

குடும்பங்களுக்கான முதல் பாலிசி!

திருமணத்திற்கு முன்பே காப்பீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்காக 'ஃபியூச்சர் ஷீல்ட்' (Future Shield) அம்சம் வழங்கப்படுகிறது. இதன் மூலம், பாலிசியில் ஏற்கனவே நிறைவடைந்த காத்திருப்பு காலங்களின் (waiting periods) நன்மைகளை, பிற்காலத்தில் பாலிசியில் சேர்க்கப்படும் வாழ்க்கைத் துணைக்கும் மாற்றிக்கொள்ள முடியும். இதனால் இளம் வயதிலேயே காப்பீடு தொடங்குவதன் முழுப் பயனும் பாதுகாக்கப்படுகிறது.

அன்றாட மருத்துவப் பராமரிப்புத் தேவைகளுக்கு 'ஸ்டார் ஓபிடி பிரீமியர்' (Star OPD Premier) உறுதுணையாக அமைகிறது. இது பாலிசி பிரீமியத்தைப் போல 5 மடங்கு வரை (அதிகபட்சமாக ₹1 லட்சம் வரம்பிற்கு உட்பட்டு) குறிப்பிட்ட வெளிநோயாளி (OPD) செலவுகளை ஈடுசெய்கிறது. பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு உட்பட்டு, கிளினிக் ஆலோசனைகள், பரிந்துரைக்கப்பட்ட ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் மருந்துகள், பல் பராமரிப்பு, கண் பராமரிப்பு மற்றும் விபத்து கால வெளிநோயாளி சிகிச்சைகள் ஆகியவை இதில் அடங்கும்.

இளம் தலைமுறை வாடிக்கையாளர்கள் மீதான இக்கவனம் மனநலம் மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மின்-இணைப்பு (E-Connect), ஊட்டச்சத்து நிபுணர் மற்றும் உளவியலாளர் ஆலோசனைகள், மனநல ஆதரவு மற்றும் மன அழுத்த மேலாண்மை திட்டங்கள் ஆகியவற்றுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் ஃபிட்னஸ் ஸ்டுடியோக்களை வாரத்திற்கு 3 முறை வரை பயன்படுத்திக் கொள்ளும் 'ஸ்டே ஃபிட்' (Stay Fit) வசதியும் வழங்கப்படுகிறது.

இந்தச் சலுகைகளுடன் சேர்த்து மருத்துவமனை அனுமதி, டே-கேர் (Day-care) மற்றும் நவீன சிகிச்சைகள், ஆயுஷ் (AYUSH), வீட்டுப் பராமரிப்பு சிகிச்சை, ஹோம் ஹாஸ்பிட்டலைசேஷன் (Domiciliary hospitalisation) மற்றும் ஆம்புலன்ஸ் சேவைகளுக்கான காப்பீட்டுப் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

மேலும், காப்பீட்டுத் தொகையில் 100% வரை வரம்பற்ற தானியங்கி புதுப்பித்தல் (Unlimited Automatic Restoration) வசதியும் இதில் அடங்கும். பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சம் இன்ஸூர்டு மல்டிபிளேயர் (Sum Insured Multiplier), ஹெல்த் பூஸ்டர் (Health Booster), நோ க்ளைம் போனஸ் (Cumulative bonus), இரண்டாவது மருத்துவ ஆலோசனை (Second medical opinion), பிரீமியம் தள்ளுபடி (Premium waiver) மற்றும் வரம்பற்ற டெலி-கன்சல்டேஷனுடன் கூடிய AI-சார்ந்த ஃபேஸ் ஸ்கேன் (AI-powered face scan) போன்ற நீண்டகால ஆதரவு அம்சங்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

'ஸ்டார் த்ரைவ்' அறிமுகம்: அன்றாட ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான வெகுமதிகள்

'ஸ்டார் த்ரைவ்' (Star THRIVE) என்பது ஸ்டார் ஹெல்த்தின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான வெகுமதி திட்டமாகும். இது ஸ்டார் ஹெல்த் வாடிக்கையாளர் செயலி (Star Health Customer App) மூலம் 'யங் ஸ்டார் நியோ' பாலிசியுடன் கிடைக்கிறது. இத்திட்டம் ஆரோக்கியமான பழக்கவழக்கங்களுக்கான வெகுமதிகளுடன், மனநல ஆதரவு, மன அழுத்த மேலாண்மை, பெண்களுக்கான பிரத்யேக ஆரோக்கிய வழிகாட்டுதல் மற்றும் சர்க்கரை நோய் (Diabetes), உயர் ரத்த அழுத்தம் (Hypertension), இதய ஆரோக்கியம் (Cardiovascular health), உடல் பருமன் (Obesity) ஆகியவற்றுக்கான நோய்க்கட்டுப்பாட்டு மேலாண்மை திட்டங்கள் (Condition Management Programs) போன்றவற்றை ஒருங்கிணைத்து வழங்குகிறது.

பாலிசிதாரர்கள் ஒரு பாலிசி ஆண்டிற்கு தகுதியுள்ள நபருக்கு அதிகபட்சமாக 18,000 'த்ரைவ் காயின்கள்' (THRIVE Coins) வரை சம்பாதிக்க முடியும். எளிதான தொடக்கம் - Seamless Start (டிஜிட்டல் ஆன் போர்டிங் மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் கணக்கு - ABHA இணைப்பு), ஹெல்த் ட்ராக் புரோ (தடுப்புப் பரிசோதனைகள் மற்றும் சுகாதார மதிப்பீடுகள்) மற்றும் வெல்னஸ் சர்க்கிள் (தினசரி உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் செயல்பாடுகள்) ஆகிய அம்சங்கள் மூலம் இந்த வெகுமதிகளைப் பெறலாம்.

சில்வர், கோல்ட், பிளாட்டினம் மற்றும் டைட்டானியம் போன்ற நிலைகளை (Tiers) எட்டும் போது, கூட்டாண்மை பெற்ற நல்வாழ்வு பிராண்டுகளுக்குத் தகுதியுள்ள நபருக்கு ₹5,000 வரை மதிப்புள்ள 'ஹெல்த் வவுச்சர்கள்' (Health Vouchers) வழங்கப்படுகின்றன. சேகரித்த காயின்களை இரு வழிகளில் பயன்படுத்தலாம்: 1 காயின் = ₹1 என்ற மதிப்பில் பாலிசி புதுப்பித்தல் பிரீமியத்தைக் குறைத்துக் கொள்ள பயன்படுத்தலாம் (திட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டது).





**Oasis Grace**
**Engineering Projects Pvt Ltd**

**Build Your Future With Us**

| 25+ | 450+ | 500+ | 20+ |
|---|---|---|---|
| Locations | Employees | Projects | Years of Excellence |

**What We Do**

- Project Management
- Residential Construction
- Commercial Construction
- Industrial & Factory Construction
- Structural Design
- Architectural Design
- PEB and HVAC Works

In 2013 Oasis Grace extended its operations to India with a goal of bringing international construction practices to India.

RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org







# சென்னையில் நடைபெற்ற கொழும்பு போர்ட் சிட்டி இன்வெஸ்டார். ஃபோரம் இல் இந்தியா–இலங்கை பொருளாதார உறவுகள் முக்கியத்துவம் பெற்றன

சென்னை – 13 நவம்பர், 2026 சென்னை, இந்தியா, நவம்பர் 05, 2026: இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், சென்னையில் உள்ள ஹயாத் ரீஜென்சியில் நவம்பர் 4ஆம் தேதி நடைபெற்ற கொழும்பு போர்ட் சிட்டி இன்வெஸ்டார் ஃபோரம், முதலீடு, தொழில்முனைவு மற்றும் எல்லை தாண்டிய வணிக கூட்டாண்மைகளுக்கான புதிய வாய்ப்புக்களை ஆராய்ந்தது.

சென்னையில் உள்ள டெபுட்டி ஹை கமிஷன் ஆஃப் ஸ்ரீலங்கா, போர்ட் சிட்டி கொழும்பு (PCC) உடன் இணைந்து நடத்திய இந்த மன்றம், நெருக்கமான வணிக ஈடுபாடு இரு நாடுகளிலும் உள்ள வணிகங்களுக்கு எவ்வாறு வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதை ஆராய்கின்ற வகையில், ரியல் எஸ்டேட், நிதிச் சேவைகள், சரக்குப் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளைச் சேர்ந்த வணிகத் தலைவர்கள், முன்னணி இந்திய தொழில்துறை வர்த்தக சபைகளின் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை ஒன்றிணைத்தது.

அழைப்பின் பேரில் மட்டுமே நடத்தப்பட்ட இந்த மன்றம், இந்திய வணிக மற்றும் முதலீட்டு சமூகத்துடனான ஈடுபாட்டை ஆழப்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டையும், நீண்டகால இருதரப்பு பொருளாதார உறவுகளை உறுதியான வணிக வாய்ப்புகளாக மாற்றுவதையும் முக்கியப்படுத்துகின்ற வகையில், இந்தியாவில் போர்ட் சிட்டி கொழும்பு நடத்திய முதல் முதலீட்டாளர் மன்றமாக அமைந்தது.

இந்த நிகழ்ச்சி, தென்னிந்தியாவுக்கான இலங்கை துணை உயர் ஆணையர் மதிப்பிற்குரிய டாக்டர் கணேசநாதன் கீதீஸ்வரன்

அவர்களின் உரையுடன் தொடங்கியது.

“இந்தியாவும் இலங்கையும் புவியியல், வரலாறு மற்றும் வணிகத்தால் பிணைக்கப்பட்டுள்ளன, அந்த உறவு எப்போதையும் விட இப்போது வலுவாக உள்ளது. அதிக வணிக ஈடுபாடு மற்றும் முதலீட்டின் மூலம் இந்த உறவுகளை ஆழப்படுத்துவதற்கு கணிசமான வாய்ப்புகள் உள்ளன. வலுவான தொழில்துறை அடித்தளம் மற்றும் தொழில்முனைவோர் சூழலமைப்பைக் கொண்ட சென்னை, இந்த உரையாடலுக்கான ஒரு முக்கியமான சந்தையாக இருக்கிறது. இந்த மன்றம் நம் இரு நாடுகளின் வணிகங்களுக்கிடையே நீடித்த கூட்டாண்மைகளை உருவாக்கவும், பகிரப்பட்ட வாய்ப்புகளை அர்த்தமுள்ள பொருளாதார விளைவுகளாக மாற்றவும் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்று அவர் கூறினார்.

இந்திய வணிகங்கள் தங்கள் உள்நாட்டு தளத்தை விட்டு வெளியேறாமல் தங்கள் திறன்களையும் சந்தை அணுகலையும் விரிவுபடுத்த உதவுகின்ற வகையில், இந்த மன்றத்தின் முக்கிய கருப்பொருள் “இந்தியாவின் வளர்ச்சிப் பயணம், மேலும் வலுப்படுத்தப்படுகிறது: ஏன் இலங்கை, ஏன் இப்போது?” என்பதாக இருந்தது. இலங்கை இந்தியாவுக்கு அருகாமையில் அமைந்திருத்தல், பகிரப்பட்ட நேர மண்டலம், கலாச்சார ஒற்றுமைகள் மற்றும் நிறுவப்பட்ட வணிக மற்றும் சட்ட நிறுவனங்கள் ஆகியவை பிராந்திய மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு சேவை செய்ய விரும்பும் வணிகங்களுக்கு நடைமுறை நன்மைகளை வழங்குகின்றன. ரியல் எஸ்டேட், தயாரிப்பு பொறியியல், கருவூலம், தரவு பகுப்பாய்வு, சைபர் பாதுகாப்பு மற்றும் வணிக செயல்முறை செயல்பாடுகள், அத்துடன் தரவு மையங்கள், தொழில்நுட்பம், AI மற்றும் பிற வளர்ந்து வரும் துறைகள் முழுவதும் உள்ள வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடல்கள் ஆராய்ந்தன. மேலும், முதலீட்டு வசதி மற்றும் முன்கூட்டியே அறியக்கூடிய ஒழுங்குமுறை சூழல் ஆகியவை, தங்கள் பிராந்திய விரிவாக்க மூலோபாயங்களின் ஒரு பகுதியாக இலங்கையை மதிப்பிடும் வணிகங்களுக்கு எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என்பதையும் இந்த விவாதங்கள் ஆராய்ந்தன.

"முதலீட்டாளர்களைப் பொறுத்தவரை, ஒரு முன்மொழிவின் வலிமை அது வழங்கும் வாய்ப்பில் மட்டுமல்ல, அவர்கள் இயங்கும் கட்டமைப்பின் உறுதியிலும் உள்ளது. ஒரு சட்டபூர்வமான கட்டமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட முதலீட்டாளர் பாதுகாப்புகள் மூலம் அந்த தெளிவை வழங்குவதற்காக போர்ட் சிட்டி கொழும்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. தங்கள் எல்லையை விரிவுபடுத்த விரும்பும் இந்திய வணிகங்களுக்கு, இலங்கை, நெருக்கமான, நன்கு அறிமுகமான இடமாக, பரந்த பிராந்திய வாய்ப்புகளுக்கான அணுகலை வழங்குகிறது. வளர்ச்சியின் மையம் இந்தியாவிலேயே இருப்பதுடன், இது வணிக திறன்களை விரிவுபடுத்துவது மற்றும் ஒரு நிரப்பு கூட்டாளராக புதிய சந்தைகளை அடைவது பற்றியது,," என்று கொழும்பு போர்ட் சிட்டி எக்கனாமிக் கமிஷன் இன் தலைவர் ஹர்ஷா அமரசேகர PC கூறினார். போர்ட் சிட்டி கொழும்பு ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும், இது இலங்கை ஜனாதிபதி அனுரா குமார திசாநாயக்க அவர்களின் அலுவலகத்தின் நேரடி மேற்பார்வையில் இயங்குகிறது, அவர் நிதி அமைச்சராகவும் பொறுப்பு வகிப்பது, இத்திட்டத்தின் மீது இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கும் தீவிர ஆர்வத்தை உணர்த்துகிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

CHEC போர்ட் சிட்டி கொழும்பு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிர்வாக இயக்குநர் துல்சி அலுவிஹாரே, ஒரு சர்வதேச வணிக மற்றும் முதலீட்டு இலக்காக போர்ட் சிட்டி கொழும்பு வின் முன்மொழிவை விவரித்து, இலங்கையின் ஒரே வெளிநாட்டு நாணயம்-நியமிக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற அதன் நிலையை எடுத்துரைத்தார். ஒற்றைச் சாளர அனுமதி செயல்முறை, முதலீட்டாளர் பாதுகாப்புகள், நிலைப்படுத்தல் பொறிமுறை, சர்வதேச நடுவர் நீதிமன்ற விதிகள், 100% வெளிநாட்டு உரிமைத்துவம் மற்றும் இந்திய ரூபாய் உட்பட 16 வெளிநாட்டு நாணயங்களில் பரிவர்த்தனை செய்யும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த மண்டலத்திற்கு அடிப்படையாக அமையும் சட்ட கட்டமைப்பையும் அவர் விரிவாக விளக்கினார்.

டிவிஎஸ் வெஹிகிள் மொபிலிட்டி சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும், CII தென் பிராந்திய சர்வதேச வணிக மேம்பாட்டு பணிக்குழுவின் இணைத் தலைவருமான மது ரகுநாத்; JLL நிறுவனத்தின் இந்தியா மற்றும் இலங்கைக்கான மூத்த இயக்குநர் மற்றும் தலைவர் – சிறப்பு மையம், மூலோபாய ஆலோசனை மற்றும் மதிப்பு & இடர் ஆலோசனைப் பிரிவு, ராபின் S; அமரசேகர; மற்றும் CHEC போர்ட் சிட்டி கொழும்பு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிர்வாக இயக்குநர் துல்சி அலுவிஹாரே ஆகியோர் துறைசார் வாய்ப்புகள், ஒழுங்குமுறை வசதிகள் மற்றும் வணிக கூட்டாண்மைகளுக்கான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாட ஒரு குழு விவாதத்தில் ஒன்று கூடினர்.

JLL நிறுவனத்தின் இந்தியா மற்றும் இலங்கை பிரிவின் மூத்த இயக்குநர், சிறப்பு மையத் தலைவர், மூலோபாய ஆலோசனை மற்றும் மதிப்பு மற்றும் அபாய ஆலோசனைப் பிரிவு ராபின் S. கூறும்பொழுது,“உள்நாட்டுச் சந்தைக்கு அப்பால் வாய்ப்புகளை ஆராயும் இந்திய வணிகங்களுக்கு, புவியியல் அண்மைத்தன்மை, வணிகம் செய்வதில் உள்ள எளிமை மற்றும் புதிய வளர்ச்சிச் சந்தைகளுக்கான அணுகல் ஆகியவை முக்கியமான பரிசீலனைகளாக இருக்கின்றன. ஒரு தெளிவான ஒழுங்குமுறை கட்டமைப்பும் வெளிப்படையான ஊக்கத் தொகுப்புக் கட்டமைப்பும் போர்ட் சிட்டி கொழும்புக்கு இந்தியாவிடமிருந்து தீவிர ஆர்வத்தைப் பெறுவதற்கான காரணிகளை வழங்குகின்றன, மேலும் இதுவரை நடைபெற்ற உரையாடல்கள் அந்த ஆர்வம் வளர்ந்து வருவதைக் காட்டுகின்றன.” என்றார்.

சென்னையில் நடைபெற்ற இந்த இன்வெஸ்டார் ஃபோரம், இந்திய வணிக மற்றும் முதலீட்டு சமூகத்துடனான தொடர்புகளை ஆழப்படுத்துவதற்கான போர்ட் சிட்டி கொழும்பு வின் முயற்சிகளில் ஒரு முக்கியமான படியாகும். இனிவரும் காலங்களில், எல்லை தாண்டிய கூட்டாண்மைகளின் சாத்தியக்கூறுகளை மேலும் விரிவுபடுத்தவும், முதலீடு மற்றும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புக்களைத் திறக்கவும் தொடர்ச்சியான உரையாடல் மேற்கொள்ளப்படும்.

# இரவு உறக்கம் முதல் விடியல் விழிப்பு வரை: குழந்தைகளின் இனிமையான காலை விழிப்புக்கு பெற்றோருக்கான வழிகாட்டி

கட்டுரையை எழுதியவர்: டாக்டர் எழிலரசி, குழந்தைகள் நல மருத்துவர், ரெயின்போ குழந்தைகள் மருத்துவமனை, அண்ணா நகர், சென்னை.



சென்னை – 13 நவம்பர், 2026: அலாரம் அடித்த பிறகு, கூடுதலாக ஒரு ஐந்து நிமிடம் தூங்குவதை நாம் ஏன் விரும்புகிறோம்? அது மனித இயல்பாக இருக்கலாம். பெரியவர்கள் வேலைக்கும் அன்றாடக் காலை கடமைகளுக்கும் எழுந்திருக்க வேண்டியிருக்கும் நிலையில், குழந்தைகளுக்குக் காலையில் ஒரே ஒரு வேலைதான் இருக்கிறது —அது படுக்கையை விட்டு எழுவது மட்டுமே. எனவே, அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது முற்றிலும் இயல்பான ஒன்றுதான்.

இந்தப் போராட்டம் ஏறக்குறைய எல்லா வீடுகளிலும் பொதுவானது. மேலும், விரக்தியில் பல பெற்றோர்கள் குளிர்ந்த நீரைப் பயன்படுத்துவது, மிரட்டுவது, கத்துவது, அடிப்பது அல்லது குழந்தையை 'சோம்பேறி' என்று அழைப்பது போன்றவற்றை முயற்சி செய்கிறார்கள். சோம்பேறி போன்ற பட்டம் அவர்களை காயப்படுத்தக்கூடும். நல்ல பழக்கவழக்க உருவாகும் பருவத்தில் ஒரு குழந்தை எதிர்மறை சொற்களை தினமும் கேட்டால், அது அந்த எண்ணத்தைத் தன் மனதில் பதிய வைத்துக்கொண்டு, அதற்கேற்ப வாழத் தொடங்கிவிடும்.

உங்கள் குழந்தையின் தூக்கத்தை புரிந்துகொள்ளுதல்

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது. அவர்களின் தூக்கம், உடலின் உயிரியல் கடிகாரத்தாலும், மரபணுக்களாலும் ஓரளவு தீர்மானிக்கப்படுகிறது. இதைக் காரணம் காட்டி, குழந்தைகள் நீண்ட நேரம் தூங்கிக்கொண்டிருக்க அனுமதிக்கக்கூடாது; மாறாக, அவர்கள் அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ள, மென்மையான மற்றும் சீரான அணுகுமுறை தேவை என்பதை உணர வேண்டும். அவைகளை பற்றி சிறிது பார்ப்போம்.

அன்புடன் தொடங்குங்கள், சத்தத்துடன் அல்ல:

குழந்தையை படுக்கையிலிருந்து எழுப்புவது, சிலசமயம் உங்களுக்கு எரிச்சலூட்டும் விஷயமாக இருக்கலாம். உங்கள் குரலை உயர்த்துவது எளிது, ஆனால், தொடர்ந்து கத்துவது, அவர்கள் உங்கள் பேச்சைப் புறக்கணிக்கக் கற்றுக்கொள்ளவோ அல்லது மோதலைத் தவிர்ப்பதற்காகப் போர்வைக்குள் ஒளிந்துகொள்ளவோ வழிவகுக்கும்.

உங்கள் குழந்தை இரவில் போதுமான அளவு தூங்கியிருந்தால், விடியற்காலையை அன்புடன் தொடங்குங்கள். அமைதியான, பாசமான “காலை வணக்கம் செல்லக்குட்டி, உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும்” போன்ற வார்த்தைகள் ஒரு நேர்மறையான சூழலை உருவாக்கி, குழந்தைகளின் மற்றும் உங்களது காலை நேரத்தை இனிமையாக்குகின்றன.

ஆழ்ந்த உறக்கமே முதன்மையானது:

குழந்தைகளுக்கு 8-10 மணிநேர தடையற்ற, ஆழ்ந்த தூக்கம் தேவை. காலையில் சீக்கிரம் எழுவதற்கு, முந்தைய நாள் இரவு சீக்கிரமே தூங்குவது எளிதான வழியாகும்.

அவர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் விஷயங்களைக் கவனியுங்கள். அறையில் உள்ள பிரகாசமான ஒளி விளக்கு, குறட்டை விடும் பெற்றோர் அல்லது உடன்பிறந்தவர், அதிக சூடாக அல்லது அதிக குளிராக இருக்கும் அறை, உரங்கப் போகும் முன் கைபேசி அல்லது கணினி திரைகளை நீண்ட நேரம் பார்ப்பது, அல்லது கனமான இரவு உணவு எல்லாம் குழந்தைகளின் ஆழ்ந்த உறக்கத்தை பாதிக்கலாம்.

குழந்தைகள் இரவில் சீக்கிரம் படுக்கைக்குச் சென்று ஆழ்ந்த உறக்கத்தைப் பெற்றால், காலையில் எளிதாக எழுந்திருக்க முடியும்.

சில நேரங்களில், போதுமான நேரம் தூங்கியும், தூக்கக் கோளாறுகள், நீர்ச்சத்து குறைபாடு, ஊட்டச்சத்து குறைபாடுகள் அல்லது மன ரீதியான பாதிப்புகள் காரணமாக தூக்கத்தின் தரம் மோசமாக இருக்கலாம். உங்கள் குழந்தை நீண்ட நேரம் தூங்கியும் சோர்வாக எழுந்தால், உங்கள் குழந்தை நல மருத்துவரை அணுகவும்.

காலை நேரத்திற்கான கதைகளை உருவாக்குங்கள்:

இரவு நேரக் கதைகள் குழந்தைகள் தூங்கச் செல்ல உதவுவது போல, காலை நேரக் கதைகள் அவர்கள் படுக்கையை விட்டு எழுவதற்கு உதவும். அதற்கான கதைகளை நீங்கள் உருவாக்க முயற்சிக்கலாம்.

நீங்கள் தேநீர் அருந்திய பிறகு, அவர்களருகே 5-10 நிமிடங்கள் படுத்துக்கொண்டு, அந்த நாளைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான சித்திரத்தை விவரியுங்கள் - “சீக்கிரம் எழுந்தால், தாத்தாவுடன் நடைப்பயிற்சி செல்லலாம், கூடுதல் நேரம் சைக்கிள் ஓட்டலாம் அல்லது உன் நடன வகுப்பிற்குச் செல்லலாம், போன்றவை” காலையில் எழுவது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக மாறும்போது, அது தண்டனையாகத் தெரிவது நின்றுவிடும்.

இசையின் மூலம் விழித்தெழச் செய்யுங்கள்:

ஒரு தாய் எப்படி பாடினாலும், தாயின் குரல் குழந்தைக்கு மிகவும் பிடித்தமான இசையாக இருக்கும்.

குழந்தைகளை உறக்கத்திலிருந்து எழுப்ப இசை ஒரு சிறந்த வழியாகும். அவர்களுக்குப் பிடித்த பாடலை முணுமுணுக்கலாம், அவர்களுடன் சேர்ந்து பாடலாம், அல்லது காலை நேரத்திற்கான இசைத் தொகுப்பையோ அல்லது அவர்களுக்குப் பிடித்த ஒலிப்புத்தகத்தையோ (audiobook) ஒலிக்கச் செய்யலாம். இனிமையான, பரிச்சயமான ஒலிகள், உறக்கத்திலிருந்து விழித்தெழுவதை மகிழ்ச்சியான அனுபவமாக மாற்றுகின்றன..

இயற்கை உங்களுக்கு உதவட்டும்:

நமது உடல் சூரிய ஒளியுடன் விழித்தெழும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. திரைச்சீலைகளைத் திறந்து காலை ஒளியை உள்ளே வரவிடுங்கள்; இது விழித்தெழுவதற்கான நேரம் என்பதை உங்கள் மூளைக்கு உணர்த்துகிறது. மூளை விழித்தால் மற்றவை எளிதாகலாம்.

இயற்கை ஒளியைப் போன்ற விளக்கை அறையில் பயன்படுத்தலாம், நீங்கள் விழிக்கும் நேரத்திற்கு முன்பு அறையை மென்மையாகச் சூடாக்க தெர்மோஸ்டாட்டை அமைக்கலாம், அல்லது குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக, காகம், சேவல் அல்லது வேறு ஏதேனும் பறவை அல்லது விலங்குகளின் ஒலிகளைக் கொண்ட வேடிக்கையான அலாரங்களைப் பயன்படுத்தலாம்.

முந்தைய இரவே அவர்களிடம், “நாளை நாம் இதற்காக சீக்கிரம் எழுந்திருக்கப் போகிறோம்...” என்று கூறித் தயார்படுத்துங்கள்; அப்போதுதான் அவர்கள் மனதளவில் தயாராக இருப்பார்கள்.

இறுதியாக, அவர்களின் காலை நேரத்தை அவர்களே நிர்வகிக்க விடுங்கள்

நீங்கள் எப்போதும் அவர்களை எழுப்பும் பொறுப்பாளராகவோ அல்லது அலாரம் மணியாகவோ இருக்க முடியாது. நீங்கள் அவர்களுக்கு வழிகாட்டலாம், ஆனால் இறுதியில் அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

முகத்தைக் கழுவிய பிறகு, தண்ணீர் பாட்டிலில் தண்ணீர் நிரப்புவது, சிற்றுண்டியைத் தயார் செய்வது, படுக்கையைச் சரிசெய்வது, காலை உணவு தயாரிக்க உதவுவது போன்ற சிறு சிறு வேலைகளைக் கொடுங்கள். இது அவர்கள் மீண்டும் தூங்கிவிடுவதைத் தடுப்பதோடு, சுயமாகச் செயல்படும் திறனையும் வளர்க்கிறது.

பழக்கவழக்கங்கள் மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் உருவாகின்றன. சீரான தன்மையைக் கடைப்பிடியுங்கள். அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பது குழந்தைகளுக்குத் தெரியவரும்போது, அவர்கள் மெல்ல மெல்ல அதைத் தாங்களே கையாளக் கற்றுக்கொள்கிறார்கள்.

பெற்றோராக இந்தப் பயணத்தை மகிழ்வுடன் அனுபவியுங்கள்.